## காலாண்டுத் தேர்வு மாதிரி வினாத்தாள் - 1 ( 2018 )

( Based on New Official Model Question Paper Pattern )

# 12 - ஆம் வகுப்பு

## வணிகவியல்

நேரம் : 2.30 மணி மதிப்பெண் : 90

பகுதி ---- I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 20 × 1 = 20

1. கூட்டுப்பங்கு நிறுமத்தின் மேலாண்மை ஒப்படைக்கப்பட்டிருப்பது
   அ. நிறுமப் பதிவாளரிடம் ஆ. இயக்குனரவையிடம் இ. பங்குதாரர்களிடம்
   ஈ. கடன் பத்திரதாரர்களிடம்

2. பிவருவனவற்றில் எவை அமைப்பின் கோட்பாடுகளில் இடம் பெறாதவை?
   அ. ஒரு முனை இயக்கம் ஆ) கூட்டாண்மை இ) கட்டுப்பாட்டு வீச்செல்லை
   ஈ. தரவரிசைக் கோட்பாடு

3. எவை சரியாக பொருந்தவில்லை?
   அ. எல்லாம் அவரே, அவரே எல்லாமும் - தனியாள் வணிகம்
   ஆ. கூட்டாளிகளின் அமைப்பு - நிறுவனம்
   இ. இந்து கூட்டு குடும்ப உறுப்பினர்கள் - கர்த்தா
   ஈ. ஒரு நபர் ஒரு வாக்கு - கூட்டுறவு

4. பொருத்துக
   1. வேலைப்பகிர்வு -- a. கட்டளை இணைப்பு
   2. ஒப்படைவு -- b. துறைப்படுத்துதல்
   3. தரவரிசைக் கோட்பாடு -- c. ஒருமித்த உத்தரவு
   4. கட்டளையொருமை -- d. ஒப்படைத்தல்

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| அ. | a | b | c | d |
| ஆ. | b | d | a | c |
| இ. | c | d | a | b |
| ஈ. | d | a | b | c |

5. தவறான கூற்று எது?
   தனியாள் வணிகம் -------
   அ. குறைந்த முதல் தேவைப்படும் தொழில்.
   ஆ. விரைவான முடிவு எடுக்கப்படும் தொழில்.
   இ. இந்தியாவில் மட்டுமே காணப்படும் தொழில்.
   ஈ. பலர் கடன் தர முன்வருவர்.

6. மன்னர்களாக மதிக்கப்படுபவர்கள் யார்?
   அ. வாடிக்கையாளர்கள் ஆ, நுகர்வோர்கள் இ. வியாபாரிகள் ஈ. பணியாளர்கள்

7. தனியாள் வணிகம் துவங்க --------
   அ. குறைந்தது இரு நபர்கள் தேவை ஆ. குறைந்தது ஏழு நபர்கள் தேவை
   இ. ஒரு நபர் மட்டும் தேவை ஈ. இவற்றில் ஏதும் இல்லை

8. பின் வருவனவற்றில் எவை சரியானவை ?
   அ. கூட்டாண்மை பதிவு - கட்டாயம்
   ஆ. கூட்டாண்மை ஏற்படுவது - சட்டத்தின் படி



   இ. கூட்டாண்மை உண்டாக்கப்படுவது - அரசின் வழிக்காட்டல்
   ஈ. தற்காலிகமான கூட்டாண்மை - இணைவினை

9. கூட்டாண்மையில் தோன்றும் உறவு முறை -------
   அ. முதல்வர் மற்றும் முகவர் ஆ. உரிமையர் மற்றும் வேலையாளர்
   இ. எஜமானர் மற்றும் பணியாளர் ஈ. தொழிலாளி மற்றும் முதலாளி

10. கூட்டாண்மையின் அடிப்படைக் கூறு --------
    அ. பூரண நல்ல நம்பிக்கை ஆ. முதலீட்டிற்கான தொகை இருத்தல்
    இ. கூடி தொழில் செய்ய விருப்பம் ஈ. மேற்கூறிய அனைத்தும்

11. தகவலறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் குறைந்தளவு பங்கெடுப்பைக் கீழ்க்கண்ட நாட்களுக்குள் ஒரு பொது நிறுமம் பெற வேண்டும்.
    அ. 90 நாட்கள் ஆ. 120 நாட்கள் இ. 130 நாட்கள் ஈ. 60 நாட்கள்

12. முன்னுரிமைப் பங்கு முன்னுரிமை பெற்றிருப்பது ----------
    அ. பங்காதாயம் பெறுவதில் மட்டும்
    ஆ. நிறுமம் கலைப்பிற்குள்ளாகி முதல் தொகையைத் திருப்பித் தரும்பொழுது மட்டும்
    இ. வாக்குரிமையைச் செலுத்துவதில்
    ஈ. பங்காதாயம் பெறுவதிலும் நிறுமம் கலைப்பின்போது பங்கு முதலைத் திரும்பப் பெறுவதிலும்.

13. பொறுப்புறுதியால் வரையறுக்கப்பட்ட நிறுமம் ஒன்றின் உறுப்பினருடைய பொறுப்பு --------
    அ. வரையறுக்கப்படாதது ஆ. வரையறுக்கப்பட்டது இ. கட்டாயமாக்கப்பட்டது

14. ஒரு பொது வரையறு நிறுமத்தில் குறைந்தளவு இருக்கவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை
    -------------- அ. இரண்டு ஆ. ஐந்து இ. ஏழு ஈ. ஒன்பது

15. கீழ்க்கண்ட சூழ்நிலைகளுள் எப்பொழுது கடனீட்டுப் பத்திரதாரர்கள் வட்டி பெறும் உரிமை பெற்றுள்ளனர்?
    அ. நிறுமம் இலாபம் ஈட்டும்பொழுது மட்டும் ஆ. பங்குநர்கள் பங்காதாயம் பெறும்பொழுது
    இ. நட்டம் ஏற்படும் ஆண்டு உட்பட எந்த ஆண்டிலும்

16. நிறுமங்கள் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை- A (TABLE - A ) என்பது ------------
    அ. நிகழ்ச்சிக் குறிப்பேட்டின் மாதிரி ஆ. இருப்பு நிலைக் குறிப்பின் மாதிரிப் படிவம்
    இ. நிறுமச் செயல் முறை விதிகளின் மாதிரி ஈ. நிறும அமைப்பு முறையேட்டின் மாதிரி

17. இரு பொது ஆண்டுக் கூட்டங்கட்கு உள்ள இடைவெளி ------------
    அ. 15 மாதங்கட்குமேல் செல்லக்கூடாது. ஆ. 12 மாதங்கட்குமேல் செல்லக்கூடாது.
    இ. 18 மாதங்கட்குமேல் செல்லக்கூடாது ஈ. 20 மாதங்கட்குமேல் செல்லக்கூடாது.

18. நிறுமச் செயலர் ஒருவர் --------------
    அ. அரசால் ஆ. இந்திய நிறுமச் செயலர்கள் அமைப்பால் இ. இயக்குநர் அவையால்
    ஈ. ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பங்குநர்களால் நியமிக்கப் பெறுகிறார்.

19. ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் கீழ்க்கண்டவற்றுள் எந்நடவடிக்கை வழக்கமாக மேற்கொள்ளப்பட மாட்டாது?
    அ. தணிக்கையர் நியமனம் ஆ. கடனீட்டுப் பத்திர வெளியீடு
    இ. பதவி விலகுமிடத்திற்கு இயக்குநர்களை நியமித்தல் ஈ. பங்காதாயம் விளம்பப்படல்.

20. பங்குநர்கள் நிறுமனத்தின் உண்மையான -------------
    அ. உறுப்பினர்கள் ஆ. இயக்குநர்கள் இ. உரிமையாளர்கள் ஈ. பங்குதாரர்கள்

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

## பகுதி --- II

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 22- க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 2 = 14

21. அமைப்பு வரையறு
22. அதிக நிதிதர மதிப்பீடு - விளக்குக
23. கடனீட்டுப் பத்திரம் என்றால் என்ன ?
24. கூட்டுருவாக்கம் பெற்ற அமைப்புகளின் வகைகள் யாவை ?
25. குறுமப் பங்கொப்பம் பெறவில்லையெனில், என்ன விளைவு ஏற்படும்?
26. கூட்டுருவாக்கச் சான்றிதழ் பெற, பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டிய ஆவணங்களில் இரண்டினைக் குறிப்பிடுக.
27. கூட்டாண்மை நிறுவனத்தில் இருக்க வேண்டிய குறைந்தபட்ச, அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது ?
28. கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன ?
29. அயல்நாட்டு நிறுமம் என்பதன் பொருள் யாது ?
30. பகராள் என்றால் என்ன ?

## பகுதி --- III

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 31- க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 3 = 21

31. பிடிப்பு நிறுமமும் --- துணை நிறுமமும் பற்றி விளக்குக.
32. இந்துக் கூட்டுக் குடும்ப வணிக அமைப்பை பற்றி சிறு குறிப்பு வரைக.
33. கூட்டாளிகளின் உரிமைகள் யாது? ( ஏதேனும் 6 )
34. கூட்டு மற்றும் தனிப் பொறுப்பு என்றால் என்ன ?
35. தனிநபர் வணிகத்தின் தீமைகளில் ஏதேனும் மூன்றினை குறிப்பிடுக .
36. வரையறுக்கப்பட்ட கூட்டாண்மை என்றால் என்ன ?
37. கூட்டாண்மை நிறுவனத்தில் உரிமை வயது அடைந்தபின் இளவரின் நிலை பற்றி விவரி?
38. ஒப்புறுதி நிறுமம் என்றால் என்ன ?
39. சட்டமுறைக் கூட்டம் என்றால் என்ன?
40. வாக்கெடுப்பு என்றால் என்ன?

## பகுதி --- IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 × 5 = 35

41. ஒரு பொது வரையறு நிறுமத்தில் இயக்குநர்கள் எவ்வாறு நியமிக்கப்படுகின்றனர்?

( அல்லது)

அமைப்பின் கோட்பாடுகளில் ஏதேனும் ஐந்தினை சுருக்கமாக விவரிக்க.

42. தனிநபர் வணிகத்தின் நன்மைகளில் எதேனும் ஐந்தினை விவரி

( அல்லது)

கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படும் சூழ்நிலைகளை விவரி

43. கூட்டாண்மை ஒப்பாவனத்தில் உள்ள உள்ளடக்கம் யாது? ( ஏதேனும் 10 )

( அல்லது)

பங்குகளை வட்டத்தில் வெளியிட நிறைவேற்றத் தேவையான நிபந்தனைகளை கூறுக.

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

44. பல்வேறு வகையான தொழில் வடிவமைப்புகளில் ஏதேனும் ஐந்தினைப் பற்றி சுருக்கமாக எழுதுக.

( அல்லது)

பங்குகளுக்கும் கடனீட்டுப் பத்திரங்களுக்கும் உள்ள வேறுபாடுகளை விவரி. (ஏதேனும் 10 )

45. தனிநபர் வாணிகத்தின் ஏதேனும் 5 குணாதிசயங்களை விளக்கி எழுதுக.

( அல்லது)

கூட்டாண்மைக்கும் கூட்டுப்பங்கு நிறுமத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?.

46. கூட்டாண்மைக்கும் தனியாள் வணிகத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாது? (ஏதேனும் 10)

( அல்லது)

கூட்டாண்மையின் சிறப்பு கூறுகளை விவரி. ( ஏதேனும் 5 )

47. ஒரு நிறுமச் செயலரின் பணிகள் யாவை?

( அல்லது)

பன்னாட்டு நிறுமங்கள் பற்றி நீவீர் அறிவது யாது? அதன் சிறப்பியல்புகள் பற்றி எழுதுக

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613